

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, அரசு போக்குவரத்து கழக மதுரை கோட்டத்தில் பணிபுரிந்து, பணிக்காலத்தில் உயிரிழந்த பணியாளர்களின் 8 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி ஆணைகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அரியலூர் முகாம் அலுவலகத்தில் வழங்கினார். உடன் அரசு போக்குவரத்து கழக மதுரை கோட்ட மேலாண் இயக்குனர் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



ஈரோடு மாவட்டம் சிவகிரியைச் சேர்ந்த ஆனந்தி என்கிற மாற்றுத்திறனாளி பெண் தற்போது வரவிருக்கும் ஆசிய விளையாட்டு போட்டியில் பங்கேற்பதற்கு அவருக்கு சக்கர நாற்காலி மற்றும் பயணத்துக்கு உண்டான செலவுகளை மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் வீரமணி ஏற்பாட்டில் மாவட்ட கழக செயலாளரும், வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயதீர்வைத் துறை அமைச்சருமான சு.முத்துசாமி வழங்கினார். அதுபோது பகுதி கழக செயலாளர்கள் குமாரவடிவேல், வி.சி.நடராஜன், பொ.ராமச்சந்திரன், அக்னி டி.சந்திரசேகரன், வில்லரசம்பட்டி ஏ.முருகேசன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.




சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 05.01.2026 அன்று சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் மற்றும் தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் பொன்குமார் ஆகியோர் கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் சார்பில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

### மதநல்லிணக்கத்துக்காகத் தொடர்ந்து உழைக்கும்

# பேராசிரியர் காதர் மொகிதீனுக்கு பிறந்த நாள் வாழ்த்துக்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளத்தில் பதிவு!

**சென்னை, ஜன. 7 -**

**இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் தேசியத் தலைவர் பேராசிரியர் காதர் மொகிதீன் அவர்களின் பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவில் மதநல்லிணக்கத்துக்காகத் தொடர்ந்து உழைத்து, வருபவர் என்று குறிப்பிட்டுள்ளார்.**

அவரது வாழ்த்துச் செய்தி வருமாறு:

இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் தேசியத் தலைவர் நம் அனைவரின் மரியாதைக்குரிய ‘தகைசால் தமிழர்’ பேராசிரியர் காதர் மொகிதீன் ஐயா அவர்களுக்கு இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துகள்!

பத்திரிகையாளர், பேராசிரியர், நாடாளுமன்ற உறுப்பினர் எனப் பலநிலைகளிலும் சமூகத்துக்குப் பங்களித்து, மதநல்லிணக்கத்துக்காகத் தொடர்ந்து உழைத்து வரும் தாங்கள் நீண்டகாலம் நலத்துடன் திகழ விழைகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### கரூரில் 2200 மாணவ , மாணவியர்களுக்கு மடிக்கணினி வழங்கல்!

# குறுகிய மனப்பான்மையுடன் நயினார் பேசியுள்ளார்!

## வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. பேட்டி!



*கரூர், ஜன. 7 -*

*கரூர் மாவட்டத்தில் முதல் கட்டமாக 2200 மாணவ, மாணவியர்களுக்கு மடிகணினி வழங்கும் திட்டத்தை கரூர் எம்.எல்.ஏ வி. செந்தில் பாலாஜி தொடங்கி வைத்தார். கரூர் தாந்தோணிமலையில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு கரூர் மாவட்ட ஆட்சியர் மீ. தங்கவேல் தலைமை வகித்தார்.*

*பின்னர் கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்டக் கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி செய்தியாளர்களிடம் கூறியதாவது:*

*முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று ‘உலகம் உங்கள் கையில்’ என்ற ஒரு மகத்தான மடிக்கணினி வழங்கக்கூடிய திட்டத்தை, குறிப்பாக 10 லட்சம் மாணவ மாணவிகளுக்கு மடிக்கணினி வழங்கக்கூடிய ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டத்தை தொடங்கி வைத்திருக்கின்றார்கள்.*

*அந்தச் சிறப்பு வாய்ந்த நிகழ்வில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு வரவேற்புரையாற்றி, மிகச் சிறப்பாக அந்த நிகழ்ச்சி நடந்து முடிந்திருக்கிறது.*

*இந்தச் சிறப்புத் திட்டத்தின் வாயிலாக கரூர் மாவட்டத்தில் குளித்தலை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,*

*தரகம்பட்டியில் பாலிடெக்னிக் கல்லூரி, அரசு கலைக்கல்லூரி,*

*கரூர், அரவக்குறிச்சியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், கரூர் அரசு வேளாண்மைக் கல்லூரி, கரூர் அரசு மருத்துவக் கல்லூரி என மொத்தம் கரூர் மாவட்டத்தில் 2,220 மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டு, 144 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது.*

*இப்படிப்பட்ட ஒரு நல்ல நிகழ்ச்சியில் அரசியலைப் பற்றி கேள்வி கேட்கின்றீர்கள். அரசியலுக்காக, தனிப்பட்ட முறையிலும் காழ்ப்புணர்ச்சியுடன் அவப்பெயரை ஏற்படுத்த வேண்டும் என்று எண்ணத்தில் குறுகிய மனப்பான்மையுடன் நயினார் பேசியுள்ளார். கரூரில் என்ன நடந்தது என்பதை முழுமையாக தெரிந்து கொள்ளாமல் பேசியுள்ளார். அங்கு சென்ற மக்களுக்கு தெரியும் என்ன நடந்தது என்பது. அரசு எந்த அளவுக்கு செயல்பட்டது? இரவோடு இரவாக முதலமைச்சர் அவர்கள் கரூர் வந்தார். பாதிக்கப்பட்ட மக்களுக்கு துணை நின்றது குறித்து மக்களுக்கு தெரியும். அரசியலுக்காக அற்பத்தனமாக பேசுகிற சில அரசியல் கட்சித் தலைவர்களுக்கு பதில் சொல்லி எனது நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை.*

*நல்ல நிகழ்ச்சி, வரலாற்று சிறப்புமிக்க மடிக்கணினி வழங்கும் நிகழ்வு நடைபெறுகிறது. மாணவ செல்வங்களுக்கு பயனுள்ள ஒரு திட்டத்தை முதல்வர் அறிவித்துள்ளார். இது மகிழ்ச்சிகரமான நாள் இவ்வாறு அவர் கூறினார்.*

*கரூர் தொகுதி எம்.பி செ. ஜோதிமணி, எம்.எல்.ஏக்கள் இரா.மாணிக்கம் (குளித்தலை), ஆர். இளங்கோ (அரவக்குறிச்சி), கரூர் மாநகராட்சி மேயர் வெ. கவிதா, துணை மேயர் ப.சரவணன், மண்டல குழு தலைவர்கள் எஸ்.பி. கனகராஜ், ஆர்எஸ்.ராஜா, சக்திவேல், அரசு கலைக்கல்லூரி முதல்வர்(பொ) சுதா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.*

### தஞ்சாவூரில் வெல்லும் தமிழ்ப் பெண்கள் டெல்டா மண்டல தி.மு.க. மகளிர் மாநாடு

# மயிலாடுதுறை மாவட்டத்திலிருந்து பெரும் அளவில் மகளிர் கலந்து கொள்ள செய்வோம்!

## நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



மயிலாடுதுறை, ஜன.7 –

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மயிலாடுதுறையில் மாவட்ட தி.மு.க அலுவலகத்தில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்டக் கழக அவைத் தலைவர் கே.ஜி.சீனி வாசன் தலைமை தாங்கினார். கழக உயர் நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சிர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம். பன்னீசெல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் கூட்டத்தின் நோக்கம் குறித்தும், கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட உள்ள தீர்மானங்கள் குறித்தும் மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் பேசினார். கூட்டத்தில் மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள் செல்வம், தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணை செயலாளர் பி.எம்.ஶ்ரீதர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இராம.இளங்கோவன், மாவட்டக் கழக கழக துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, கண்ணகிபன்னீர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மூவலூர் எம்.மூர்த்தி, மங்கை எம். சங்கர், என்.இளையபெருமாள், செல்லசேது.ரவிக்குமார், மலர்விழிதிருமாவளவன், பி.எம். அன்பழகன், எம்.அப்துல்மாலிக், ஏ.ஜி.ஜெ.பிரபாகரன்

பஞ்சு.குமார், அமிர்த.விஜய குமார், ஏ.ஆர்.ராஜா, கு.வைத்தியநாதன், நகர கழகச் செயலாளர்கள் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், ம.சுப்பராயன், பொதுக்குழு உறுப்பினர்கள் பி.சிவதாஸ், பி.கென்னடி, அ.காந்தி, நத்தம் ஏ.வின்சென்ட், ஹர்ஷத், எஸ்.சங்கரநாராயணன், ஜெ.கபிலன், சுபாநெடுஞ்செழியன் பேரூர் செயலாளர்கள் எம்.சம்சுதீன், என்.அண்ணாதுரை, எம்.கே.முத்துராஜா, எம்.அன்புச்செழியன், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் எம்.கே.மருது, காளி.தேசப்பன், ஆர். சாந்தி, வி.எஸ்.பிரபாகர், மா.வைத்தியநாதன், இரா.முருகன், பெரு.வீரமணி. இரா.மனோகரன், வி.எஸ்.பிரபாகர், இரா தன்ராஜ், டி.ராஜ்குமார், ஆர்.எஸ்.ஶ்ரீதர், இரா.செவ்வாஜ், தீபா.சத்தியேந்திரன், கஅறிவுச்செல்வன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் தஞ்சாவூரில் வரும் 26ம் தேதி வெல்லும் தமிழ் பெண்கள் டெல்டா மண்டல தி.மு.க. மகளிர் மாநாட்டிற்கு மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் பகுதியில் உள்ள கிளைகள், வார்டு தோறும் மகளிர் அணியினர் பெரும் அளவில் கலந்து கொள்ள செய்வது எனவும், மகளிர் தி.மு.க. மாநாட்டிற்கு மகளிர் பெரும் அளவில் கலந்து கொள்ள ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணிகளின் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஏற்பாடுகளை செய்து, மாநாட்டிற்கு செல்லும் மகளிர் குறித்த பட்டியலை தயார் செய்து மாவட்ட கழத்திடம் வழங்கிட வேண்டும் என்றும், மகளிர் மாநாடு குறித்து தஞ்சையில் நடைபெரும் முன் ஏற்படுகள் குறித்த கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் கலந்து கொள்ள வேண்டும் என்றும், இந்திய தேர்தல் ஆணையத்தால் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு பணிகள் நடைபெற்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. இதையடுத்து தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிக்கு வாக்குச்சாவடிகளில் சிறப்பு முகாம் கடந்த 27.12.2025 மற்றும் 28.12.2025 ஆகிய இரண்டு நாட்களில் நடைபெற்ற முகாம் நாடை பெற்றது போல் வரும் மற்றும் 3.1.2026 சனிக்கிழமை, 4.1.2026 ஞாயிற்றுக்கிழமை ஆகிய தேதிகளில் மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள அனைத்து வாக்குச்சாவடிகளிலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த பணிக்கு வாக்குச்சாவடி அலுவலர்களால் விண்ணப்பங்கள் பெற உள்ளது.கழக நிர்வாகிகளுடன் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (பி.எல்.ஏ.2), வாக்குச்சாவடி டிஜிட்டல் ஏஜெண்டுகள் (பி.டி.ஏ), வாக்சாவடி உறுப்பினர்கள் (பி.எல்.சி), கிளை, வார்டு செயலாளர்கள், நிர்வாகிகள், கழகத்தினர் வாக்காளர் பட்டியலை மீண்டும் ஒருமுறை சரி பார்த்து வாக்குச்சாவடி சிறப்பு முகாமில் விடுபட்ட வாக்காளர்களையும், புதிதாக சேர்க்க வேண்டிய வாக்காளர்களையும், கழக ஆதரவு வாக்காளர்களையும் சேர்க்கவும், இறந்த வாக்காளர்கள், நிரந்தரமாக குடிபெயர்ந்த வாக்காளர்கள், போலி வாக்காளர்களை நீக்கிடவும், பெயர், முகவரி திருத்தம் செய்திடவும் உரிய படிவத்தை நிரப்பி .வாக்கு சாவடி அலுவலர்களிடம் வழங்கிட வேண்டும். இந்தப் பணி சிறப்பாக அமைந்திட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், சட்டமன்ற முன்னாள் , இந்நாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள்,பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகள், நகர மன்ற தலைவர்கள், துளைத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள்,, துணைத் தலைவர், மற்றும்உறுப்பினர்கள், .வாக்குச்சாவடியில் நடைபெற உள்ள வாக்காளர் பட்டியல் தீவிர சிறப்பு முகாமில் பங்கேற்று பணியாற்ற வேண்டும் என்றும், தலைமை கழகத்தால் திராவிடப் பொங்கல் சமூக நீதிக்கான திருவிழா கொண்டாட்டம் 31.12.2025 அன்று உடன்பிறப்புகளுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் அவர்கள் அறிவிப்புக்கு இனங்க தமிழர் திருநாளான பொங்கல் திருவிழாவையொட்டி மாநிலம் முழுவதும் கழகத்தின் சார்பில் மூன்று கட்டங்களாக பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை நடத்தி பரிசுப் பொருட்களை வழங்கிட வேண்டும் என்பதற்கு இனங்க ஜனவரி 3ம் தேதி முதல் 9ம் தேதி வரை பேரூர் உள்ளடக்கிய ஒன்றியம் நகரம் பகுதி அளவிலான விளையாட்டுப் போட்டிகளை ஒருங்கிணைந்த ஒன்றியம் ஒருங்கிணைந்த தகரம் அளவில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை நடத்திடுவது என்றும். கிரிக்கெட் வாலிபால், கபடி, கால்பந்தாட்டம், ஓட்டப்பந்தயம் மிதிவண்டிப் போட்டி ஆண் பெண் இருபாலருக்கும் தனித் தனியாக ஒவ்வொரு பிரிவினருக்கும் குறைந்தபட்சம் தலா 3 போட்டிகளை நடத்திடுவது என்றும், ஒன்றியநகர அளவில் வெற்றி பெற்ற அணிகளைக் கொண்டு மாவட்ட அளவிலான விளை யாட்டுப் போட்டிகளை ஜனவரி 10ஆம் தேதி தொடங்கி பொங்கல் திருவிழா வரை நடத்தி பரிசுகளை வழங்கிடுவது என்றும், போட்டிகளை ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு அணியினரும் சிறப்பாக நடத்தியது என்றும்.தீர்மா னங்கள் நிறைவேற்றபட்டது

### 22 ஆண்டுகாலக் கோரிக்கையை நிறைவேற்றிய

# தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினுக்குப் பாராட்டு!

## தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றப் பொதுச் செயலாளர் – நா.சண்முகநாதன் அறிக்கை!

*புதுக்கோட்டை, ஜன. 7 -*

*ஆசிரியர், அரசு ஊழியர்களுக்கு தமிழ்நாடு புதிய உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டம் அறிவித்த தமிழ்நாடு முதல்வருக்கு தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம் சார்பில் அதன் பொதுச் செயலாளர் நா.சண்முக நாதன் பாராட்டு தெரிவித்துள்ளார்.*

*இது குறித்து அவர் கூறியதாவது:*

*தமிழ்நாட்டின் ஆசிரியர், அரசு ஊழியர்களின் பிரதான கோரிக்கையான 22 ஆண்டுகளாக தொடர்ந்து போராடி வந்த பங்கேற்பு ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்து விட்டு பழைய ஓய்வு திட்டத்தை தொடர வேண்டும் என்ற கோரிக்கை தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களால் நிறைவேற்ற ப்பட்டிருக்கிறது.*

*22 ஆண்டுகால கோரிக்கைக்கு தீர்வு காணும் வகையில் பழைய ஓய்வு திட்டத்திற்கான அறிவிப்பினை தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பது ஒட்டுமொத்த ஆசிரியர்கள் ,அரசு ஊழியர் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.*



*தேர்தல் அறிக்கையில் சொன்னவாறு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் ஆசிரியர்கள்,அரசு ஊழியர்களின் வாழ்வாதார கோரிக்கையை நிறைவேற்றி இருக்கிறார்.*

*இந்த அறிவிப்பானது பணி நிறைவு பெற்ற ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் மத்தியில் ஒரு நம்பிக்கையினை ஏற்படுத்தி உள்ளது.*

*பணி நிறைவு பெற்றவர்களும் பயன்பெறும் வகையில் கருணைத்தொகைஅறிவித்திருப்பதையும் வரவேற்கிறோம்.*

*அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலனையும் அவர்களின் குடும்பத்தின் எதிர்காலத்தையும் மனதில் கொண்டு, தொலைநோக்குப் பார்வையுடனும் நடைமுறை சாத்தியங்களுடனும் கூடிய வகையில், அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் 22 ஆண்டு கால கோரிக்கையை நிறைவேற்றி, பழைய ஓய்வூதியத் திட்டத்திற்கு இணையான ஓய்வூதியத்தையும், பணப் பயன்களையும் பெற வழிவகுக்கும் வகையில் செயல்படுத்தப் பட உள்ள இந்த TAPS திட்டத்தினை, அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஒருமனதாக வரவேற்கிறோம்.*

*தன் வாழ்நாளில் ஆசிரியர் அரசு ஊழியர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை வழங்கிய கலைஞர் அவர்களின் வழியில் தொடர்ந்து ஆசிரியர் அரசு ஊழியர்களின் பாதுகாவலராக தமிழ்நாடு முதல்வர் அவர்கள் இருந்து வருகிறார்.*

*எனவே உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக தமிழ் இனம் காக்க பாடுபட்டுக் கொண்டிருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றத்தின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம் மாநிலப் பொதுச்செயலாளர் மன்றம் நா.சண்முகநாதன் தெரிவித்துள்ளார்.*



தருமபுரி மேற்கு மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி பி.பள்ளிப்பட்டி ஊராட்சியில் நடைபெற்ற வாக்காளர் பட்டியல் திருத்த சிறப்பு முகாமில் தி.மு.க. தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர். பி.பழனியப்பன் வாக்காளர் சேர்த்தல், நீக்கல் உள்ளிட்ட பணிகளை ஆய்வு செய்தார். உடன் ஒன்றிய செயலாளர் பி.எஸ்.சரவணன், ஆசிரியர் ராமகிருஷ்ணன், வாக்குசாவடி முகவர்கள் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

### தி.மு.க. நெசவாளர் அணி திருச்சி தெற்கு மாவட்டம்,

# திருச்சி கிழக்கு மாநகர அமைப்பாளர் நியமனம்!

## தி.மு.க. நெசவாளர் அணித் தலைவர் நன்னியூர் இராஜேந்திரன் அறிவிப்பு!

திருச்சி தெற்கு மாவட்டம், திருச்சி கிழக்கு மாநகர நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.பெஞ்சமின் அவர்களுக்குப் பதிலாக **கே.விஜயகோபால்** (121/ஏ, கீழபடையாச்சி தெரு, பாலக்கரை, திருச்சி1) அவர்கள் திருச்சி கிழக்கு மாநகர நெசவாளர் அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை /18.
நாள் : 5.1.2026

**நன்னியூர் இராஜேந்திரன்**
தலைவர்
தி.மு.க. நெசவாளர் அணி



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், உயர்கல்வித்துறை சார்பாக, கல்லூரி மாணவர்களின் திறன் வளர்ச்சி மற்றும் டிஜிட்டல் முன்னேற்றத்திற்காக,உலகம் உங்கள் கையில் என்னும் மாபெரும் திட்டத்தின் கீழ், 10 இலட்சம் மடிக்கணினிகள் வழங்கும் பணிகளை துவக்கி வைத்தார். அதனைத்தொடர்ந்து, கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கூட்டரங்கத்தில், ”உலகம் உங்கள் கையில்” என்னும் மாபெரும் திட்டத்தின் கீழ், மருத்துவம், கலை மற்றும் அறிவியல், தொழில் பயிற்சியில் இறுதியாண்டு பயிலும் 681 மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினிகளை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் மதியழகன் எம் எல் ஏ, மேற்கு மாவட்டச் செயலாளர் பிரகாஷ் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் ஆகியோர் வழங்கினார்கள். உடன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதா, கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் சத்யபாமா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.